# யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## விடுமுறைக்கால செயலட்டை - 2 –2020–தரம் 11
## Holiday Worksheet - 2 – 2020 –Grade 11

| | | | | |
|---|---|---|---|---|
| சைவநெறி | 12 | T | I,II | 3 மணித்தியாலம்<br>3 hours |

சுட்டெண் **Index No** | | | | | |

# சைவநெறி

### பகுதி – I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. “உமபர்தரு தேனுமணி….; எனும் திருப்புகழ்ப் பாடலில் போற்றப்படுபவர் யார்?
    1. விநாயகர் 2. சிவன் 3. முருகன் 4. விஸ்ணு

02. உயிரினங்கள் தோன்றி, வாழ்ந்து மறைய மூலகாரணமான பொருள்
    1. உயிர்கள் 2. மலங்கள் 3. கடவுள் 4. உலகம்

03. பிரம்ம வேதம் என அழைக்கப்படுவது.
    1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வணம்

04. “மகிழவரு மணம்புரிந்த மாதினியார் மணிவயிற்றில்…” எனும் பாடலில் சேக்கிழாரால் புகழப்படுபவர்.
    1. திலகவதியார் 2. மங்கையர்க்கரசியார்
    3. புனிதவதியார் 4. இசைஞானியார்

05. சாயா கிரகங்கள் எனப்படுபவை
    1. சனி, வியாழன் 2. இராகு, கேது
    3. செவ்வாய், வியாழன் 4. வெள்ளி, கேது

06. பிரமா, விஸ்ணு அடிமுடி காணமுடியாதவாறு சோதிப் பிழம்பாக தோன்றிய இறைவன் அவர்களுக்கு அருள் புரிந்த நாள்
    1. திருவாதிரை 2. திருக்கார்த்திகை 3. தீபாவளி 4. சிவராத்திரி

07. பிதிர்த்தர்ப்பணம் செய்ய அவசியமானவை
    1. பூவும் நீரும் 2. பாலும், இளநீரும் 3. அன்னமும் நீரும் 4. எள்ளும், நீரும்

08. “மன்னுமாலை மகேந்திரம் அதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்….” என ஆகமச் சிறப்பைப்பாடியவர்
    1. சம்பந்தர் 2. அப்பர் சுவாமிகள் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

09. திருமாலின் நாமங்களில் ஒன்றான அச்சுதன் என்பதன் பொருள்
    1. அருள்பவன் 2. ஆற்றலுடையவன் 3. அழிவற்றவன் 4. சுகத்தைத்தருபவன்

10. குமரகுருபரர் பன்மொழி ஆற்றல் வேண்டிப் பாடிய பாடல்
    1. அபிராமி அந்தாதி 2. திருவாய்மொழி
    3. பராபரக்கண்ணி 4. சகலகலாவல்லிமாலை

11. வைகாசிப்பூரணை நாளில் கடல் நீர் விட்டு விளக்கெரிக்கப்படும் சிறப்புப் பெறும் ஆலயம்
    1. காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம்
    2. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
    3. நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம்
    4. திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆலயம்

12. சிவஞானபோதத்தை அருளிய மெய்கண்டதேவரின் குருவாக விளங்கியவர்
    1. அருணந்தி சிவாச்சாரியார்
    2. சத்தியஞானதரிசினிகன்
    3. சனற்குமார முனிவர்
    4. பரஞ்சோதி முனிவர்

13. மயில்வாகனனாருக்கு "விபுலானந்தர்" எனும் துறவு நாமத்தை வழங்கியவர்
    1. சுவாமி சிவானந்தர்
    2. பரமஹம்சர்
    3. சுவாமி விவேகானந்தர்
    4. சைவப்புலவர் அருணாச்சலதேசிகர்

14. நல்லூர் கந்தசாமி கோயிலைக்கட்டிய மன்னன் எனக் கருதப்படுபவர்
    1. செண்பகப்பெருமாள்
    2. ஆறாம் பராக்கிரமபாகு
    3. சங்கிலியன்
    4. பண்டாரவன்னியன்

15. புண்ணியம் செய்வார்க்கு பெருஞ்செல்வம் வேண்டியதில்லை என்பதை "புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு" எனப் பாடியவர்
    1. திருமூலர்
    2. திருநாவுக்கரசர்
    3. நாவலர்
    4. திருவள்ளுவர்

16. நாட்டர் கலைகளுள் அடங்காதவை
    1. காவடி, கரகம், வசந்தன் பாடல்கள்
    2. கோலாட்டம், கும்மி, கூத்து
    3. காவடி, வில்லிசை, கோலாட்டம்
    4. நடனம், பண்ணிசை, தவில்க்கச்சேரி

17. பஞ்சபாண்டவர்கள் பகைவரை வென்று வாகை சூடவும் விரத பலன் உடன் கிடைக்கவும் அனுட்டிக்க கண்ணபிரான் கூறிய விரதம்
    1. ஆவணிச்சதுர்த்தி
    2. திருவாதிரை
    3. திருப்பாவை
    4. விநாயகர் சஷ்டி விரதம்

18. தாண்டவக் கோலத்தில் சிவபெருமான் படிமத்தில் குரங்கொன்று தாண்டவம் புரிகின்ற காட்சி காணப்படும் தொன்மைமிக்க இடம்
    1. வந்தாறு மூலை
    2. கடலாதெனிய
    3. பொலநறுவை
    4. காரைக்கால்

19. வீதி உலாவரும் இறைவனை தரிசிப்பதால் கிடைக்கும் தீட்சை
    1. சாம்பவ தீட்சை
    2. ஔத்திரி தீட்சை
    3. சமயதீட்சை
    4. மானச தீட்சை

20. தேவர்களை சிறைமீட்ட பகுதி அமைந்துள்ள காண்டம், நூல்
    1. யுத்த காண்டம், இராமாயணம்
    2. யுத்த காண்டம், கந்தபுராணம்
    3. தட்சகாண்டம், கந்தபுராணம்
    4. அசுர காண்டம், கந்தபுராணம்

21. தம்பிரான்தோழர் எனச்சிறப்பிக்கப்படும் நாயனார் இறுதியாகப் பாடிய பாடல்
    1. "தலைக்குத் தலைமாலை…."
    2. "எண்ணுகேன் என் சொல்லி…"
    3. "பிழையுளன பொறுத்திடுவீர்…."
    4. "மீளா அடிமை…"

22. திருநாவுக்கரசு நாயனார் தாம் கண்ட கைலைக்காட்சியை எப்பதிகத்தில் அழகாகப் பாடியுள்ளார்?
    1. "பண்ணினேர் மொழியாள்…"
    2. "மாதர்பிறைக்கண்ணியானை…"
    3. "ஒன்றுகொலாம் அவர் சிந்தை…"
    4. "எண்ணுகேன் என்சொல்லி…"

23. "உண்மை விளக்கம் எனம் சித்தாந்த நூலை எழுதியவர்
    1. சகலாகம பண்டிதர்
    2. அருணகிரிநாதர்
    3. உமாபதி சிவாச்சாரியார்
    4. மனவாசங்கடந்தார்

24. ஏனைய மதங்களின் கொள்கைகளைக்கண்டித்து சைவசித்தாந்தத்தின் ஏற்றத்தை நிறுவுகின்ற சித்தாந்த அட்டகத்துள் அடங்கும் நூல்
    1. திருவருட்பயன்
    2. கொடிக்கவி
    3. சங்கற்ப நிராகரணம்
    4. போற்றிப்ப.்.றொடை

25. அருணகிரிநாதர்  முருகப் பெருமான் காட்சியளிக்க வேண்டிப்பாடிய திருப்புகழ் பாடல்
1. “அதலசேடனார் ஆட…”
2. “இறவாமல் பிறவாமல்…”
3. “முத்தைத்தரு…”
4. “உம்பர் தருதேனு…”

26. ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படும் நாவலர் பெருமானின் குருபூசைத்தினம்
1. ஆடிச்சுவாதி
2. வைகாசி மூலம்
3. கார்த்திகை மகம்
4. ஆவணி உத்தரம்

27. சைவசித்தாந்த நூல் எதுவும் இயற்றாத சந்தான குரவர்
1. மெய்கண்ட தேவர்
2. அருணந்தி சிவாச்சாரியார்
3. உமாபதி சிவாச்சாரியார்
4. மறைஞானசம்பந்தர்

28. ஈழத்தில் மிக உயரமான கொடித்தம்பம் உள்ள ஆலயம்
1. ஒட்டிசுட்டான் தான்தோன்றீச்சரம்
2. பொன்னம்பலவாணேச்சரம்
3. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம்
4. காரைநகர் சிவன் ஆலயம்

29. திருவருட்பயனில் இறைவனுடைய மேலான தன்மையை விளக்குவது
1. உயிரவை நிலை
2. இருண்மல நிலை
3. அருளுரு நிலை
4. பதிமுது நிலை

30. நடராஜப் பெருமானைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் கருதிப்பாடிய பாடல்
1. திருவிசைப்பா
2. திருவாசகம்
3. திருக்கோவையார்
4. திருச்சதகம்

31. சொற்கோவும் தோணிபுரத்தோன்றலும் இணைந்து பணி செய்த ஆலயங்கள்
1. சீர்காழி, சிதம்பரம்
2. கோணேச்சரம், கேதீச்சரம்
3. ஒட்டிசுட்டான், கொக்கட்டிச்சோலை
4. திருவீழிமிழலை திருமறைக்காடு

32. தேவாசிரியன் மண்டபம் அமைந்துள்ள இடம்
1. திருவாமூர்
2. திருவாரூர்
3. திருவொற்றியூர்
4. பூம்புகார்

33. திருமஞ்சனம் எனப்படுவது
1. அபிடேகம்
2. அலங்காரம்
3. தீபாராதனை
4. நைவேத்தியம்

34. நவீனயுகத்து அரிச்சந்திரன் எனப் போற்றப்படுபவர்
1. நாவலர்
2. விபுலானந்தர்
3. காந்தியடிகள்
4. திருவள்ளுவர்

35. திருவிசைப்பா பாடல்களை அருளியவர்கள்
1. 12
2. 9.
3. 27
4. 11

36. தமிழாகமம் எனச் சிறப்பிக்கப்படும் நூல்
1. திருக்குறள்
2. திருவாசகம்
3. திருச்சதகம்
4. திருமந்திரம்

37. இலிங்க வழிபாட்டின் மூலம் வீடுபேறு அடைந்தவர்கள்
1. சேரமான் பெருமாள், பூசலார்
2. திருமூலர், குலச்சிறையார்
3. இயற்பகையார், சிறுதொண்டர்
4. அப்பூதியடிகள், கலிக்காமர்

**38 - 40 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி விடை தருக.**

| | | |
|---|---|---|
| A - அருணந்தி சிவாச்சாரியார் | D- ஞான மார்க்கத்தில் சிறிது காலம் மௌனம் காத்து வாழ்ந்தவர் | G - திருவருட்பயன் |
| B - மறைஞான சம்பந்தர் | E - குருவின் முழங்கை வழியாக ஒழுகிய கூழை பிரசாதமாக அருந்தியவர் | H - சிவஞான சித்தியார் |
| C - உமாபதி சிவாச்சாரியார் | F - அனைத்து ஆகம நூல் கல்வியில் வித்துவம் பெற்றவர் | I - சதமணித்திரட்டு |

38 . ஆவணி மாத உத்தர நட்சத்திரத்தில் முத்தி அடைந்தவர்களுடன் தொடர்புடைய தொகுதி
1. AEH
2. AEG
3. BDI
4. CFH

39. “ஆணவத்தின் சொரூபம் யாது?” என்று வினா எழுப்பியவருடன் தொடர்புடைய தொகுதி
1. ADG
2. AFH
3. BFH
4. CDI

40. “பதிமுதுநிலை” எனும் முதலதிகாரத்தைக் கொண்ட நூலோடு தொடர்புடைய தொகுதி
1. AFH
2. BDI
3. CEG
4. CEH

## பகுதி - II

**முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. சுருக்கமான விடை தருக.
   1. சமய தத்துவ நூல்கள் உண்மைகளை நிரூபிப்பதற்கு கையாளும் 3 வழிமுறைகளும் எவை?
   2. நாம் வாழும் இடங்களிலெல்லாம் திருக்கோயில்களை அமைப்பதன் முதன்மை நோக்கம் யாது?
   3. பட்சங்கள் எத்தனை விளக்குக?
   4. அஸ்தி சஞ்சயனம் என்றால் என்ன?
   5. பிரதிஷ்டை என்பதன் பொருள் என்ன?
   6. அருணகிரிநாதர் முருகப் பெருமான் மீது பாடிய பனுவல்கள் 4 தருக.
   7. அகச்சந்தான குரவர்களைக் குறிப்பிடுக.
   8. சுவாமி விபுலானந்தர் எழுதிய நாடகத்துறை நூல் எது?, இசைத்துறை நூல் எது?
   9. நாகர்கள் கற்றளிகளை அமைத்த இடங்கள் எவை?
   10. சைவசமயத்தவரிடம் காணப்படும் மனிதநேயப் பண்புகள் 4 தருக.

(10x2=20 புள்ளிகள்)

02. பின்வரும் திருமுறைப்பாடல்களில் இரண்டினைத் தெரிவு செய்து அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக. பொருளையும் எழுதுக.
   1. “அந்தணாளன் உன்…”
   2. “பாலுக்குப் பாலகன்…”
   3. “உற்றுமை சேர்வது…”
   4. “ஆத்தாளை எங்கள்..”
   5. “உம்பர் தரு..”

(5x2=10 புள்ளிகள்)

03. **“வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்”**
   1. இந்து சமயத்தின் முதனூல்கள் எவை?
   2. சிவபிரானின் திருமுகங்கள் ஐந்தும் எவை?
   3. ஆகமங்களின் பிரிவுகளைக்குறிப்பிட்டு விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

04. **“பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்**
**மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்**
**ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்**
**கோதிலாத குணப் பெருங் குன்றனார்”**
   1. மேற்குறித்த பாடல் இடம்பெற்ற நூல் எது? இதனை அருளியவர் யார்?
   2. இப்பாடலில் குறிப்பிடப்படும் இறைவனின் வடிவம் யாது? பூதம் ஐந்தும் எவை?
   3. திருக்கூட்டச்சிறப்பில் குறிப்பிடப்படும் சிவனடியார்களின் பெருமைகளைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

05. **“பன்னிரு திருமுறைகள் தொகுக்கப்பட்ட பின்னர் பாடப்பட்டவை பிற்காலத் தோத்திரப்பாடல்களாகும்”**
   1. பிற்காலத் தோத்திரப்பாடல்கள் நான்கைத் தருக.
   2. அன்னை அபிராமியின் திருக்கோலத்தைக் காட்டும் தொடர்கள் மூன்று தருக.
   3. பராபரக்கண்ணி என்னும் நூலை அருளியவர் யார்? அப்பெயர் அந்நூலுக்கு ஏன் ஏற்படலாயிற்று?

(2+3+5=10 புள்ளிகள்)

06. **“நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே…”**
   1. நாவலர் பெருமானின் பெற்றோர் பெயர், பிறந்த ஆண்டு, இடம் என்பற்றைக் தருக.
   2. அவர் இலங்கையில் நிறுவிய அச்சியந்திரசாலையின் பெயர் யாது? அதனை அமைத்ததன் நோக்கங்கள் எவை?
   3. நாவலர் பெருமான் ஆற்றிய சமூகப் பணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
   1. திருமணச்சடங்கு
   2. சைவ விழுமியங்கள்
   3. தீபாவளிப்பண்டிகை
   4. வைரவர் வழிபாடு

(5x2=10 புள்ளிகள்)